# முல்லைப்பாட்டில் மாந்தர்களின் மனநிலை

**கு.சிந்து** / Ref. No -22097 / Ph.D. k8

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழாய்வுத் துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி - 620 024, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் இரா. இரவிச்சந்திரன்**,

ஆய்வுநெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி - 620 001, தமிழ்நாடு,

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழிலக்கியங்கள் பழமையும், புதுமையும் நிறைந்த கருத்துக்களைக் கொண்டது. இதுவே கற்பு சார்ந்த அகப்பாடலாகக் காணப்படுகிறது. இந்நூலில் மாந்தர்கள் அனைவரும் தனக்காக மட்டுமின்றிப் பிறருக்காக வாழும் இயல்பினைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். முல்லை நிலம் கற்பிற்குப் பெயர் போனதாகும். ஐந்திணைகளில் குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நான்கிற்கு இல்லாத, சிறப்பு முல்லைக்கு மட்டுமே உரியதாகும். திணை அடிப்படையில் அமைந்த நூல்களில் இதுவும் ஒன்றாகும்.

போரின் காரணமாகப் பிரிந்துச் சென்ற தலைவனை எண்ணித் தலைவி துயருற்றாள். தலைவியைத் தேற்றும் முகமாக முதுபெண்டிர் நற்சொல் கேட்டு திருமாலை வணங்கிநின்றனர். முல்லை நில பெண்ணான ஆயர் மகளின் கூற்றுத் தலைவிக்கு ஆறுதல் தருவதாக அமைந்துள்ளது. கன்றினுடையப் பசிக்கு ஆய்ச்சியரின் பதில் ஆறுதல் தருவதாக அமைந்துள்ளது. யானையைப் பழக்கப்் பழக்கக் கூடிய பாகர் வடமொழியறிவைப் பெற்றிருந்தனர். பாசறையில் மன்னனுக்கு உற்ற துணையாகப் பெண்கள் வலிமையுடனும், திண்ணிய நெஞ்சுடனும் காணப்பட்டனர். அரசனுக்கு போர்க்களத்தில் உதவியாக மெய்க்காப்பளர்கள் ஊமை மிலேச்சர்கள் எனக் காவல் பணியில் சிறப்பாகப் பணியாற்றினார். அரசனுக்கு கிரேக்க நாட்டு ஊமை மிலேச்சர்கள் போர்த்தொழிலில் ஈடுபட்டு உதவி புரிந்துள்ளனர். என்பதை முல்லைப்பாட்டின் வழி அறியலாகும் செய்திகளாகும். அரசன் பாசறையில்

போர்த்தொழிலை விடுத்து, வேறு சிந்திக்காதத் தலைவனின் கடமையும், இல்லில் அரசனைத் தவிர வேறு எண்ணமில்லாத தலைவியின் மாண்பும் போற்றத்தக்கது ஆகும். இதனை விரிவாக பின்வரும் ஆய்வுக் கட்டுரையின் வழி காண்போம்.

## முன்னுரை

மனிதன் கருவில் இருக்கும் போதே மனமும், அதற்கான குணங்களும் தீர்மானிக்கப்படுகிறது. இந்த மனம் மரபு வழியில் குணத்தைப் பண்புகளைப் பெற்று, சிந்திக்கும் அறிவிற்கேற்ப விரிவடைகிறது. உதாரணமாக,

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"**[1]

என்கிறார் வள்ளுவர். தாமரை மலரின் தண்டானது நீரின் அளவுக்கேற்ப உயர்ந்து காணப்படும். அதுபோல மனமானது சிந்திக்கும் தன்மைக்கேற்ப உயர்ச்சியடையும். ஆகவே மனித மனத்தைச் சிறந்த வேலைக்காரனாக ஆக்கிக் கொள்ளவேண்டும். அது தூண்டும் உணர்வுகளைப் பற்றி பேசவேண்டும். உலக ஒழுங்கிற்கும், இலட்சியத்திற்கும் அந்த எண்ணம் இடையூரானது என்றால் அவ்வெண்ணத்தைக் கைவிட்டு, மனத்தைக் கண்டித்துப் பேசப் பழகவேண்டும். ஏனெனில் மனதோடு பேசத்துணைச் செய்வது மனம் மட்டுமே. கண்ணாடியில் காணும் உருவம் போல மனம் தன்னைத் தானே காணவல்லது. இத்தகைய மனத்தின் நிலையை முல்லைப்பாட்டின் வழியிலே காண்போம்.

## முதுபெண்டிர் மனநிலை

முல்லை நிலத்தில் கார்காலம் தொடங்கியது. மேகம் தன் மழைப் பெய்யும் தொழிலைத் தொடங்கிய மாலை காலம் அது இதனையே,

"**காரும் மாலையும் முல்லை**"[2]

என்பார் தொல்காப்பியர். மாலைப்பொழுது நெருங்குகையில் ஊரின் அருகே உள்ள கோவிலுக்கு திருமாலை வழிபடச் செல்வர். அப்போது வண்டுகள் ஆரவாரம் செய்யும்படியான நெல்லும், முல்லை மலரும் தூவி முதுபெண்டிர் இறைவனைத்தொழுது நிற்பார்கள். எவ்விடத்திலும் நற்சொல்லை விரும்பிக் கேட்கும் மனநிலையில் இருந்தனர் என்பதற்கு,

**"பெருமுது பெண்டிர் விருச்சி நிற்ப"[3]**

என்ற முல்லைப்பாட்டினுடைய அடிகள் கார்காலச் செய்திகளுக்குச் சான்றாக அமைந்துள்ளது. வாழ்கையில் இளமைத் தளர்ந்தாலும் முதுமையில் முடிசூடலாம் என்ற உயர்ந்த மனநிலையை சங்கக்காலப் பெண்கள் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இங்குப் போரின் பொருட்டுத் தலைவனைப் பிரிந்த தலைவி துயரோடு காணப்படுகிறாள். வருத்த மிகுதியால் அவனைத் தேற்றும் விதமாக முதுபெண்டிரின் சொல் இங்கு அமைகிறது.

**"முத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்"**

என்ற நன்மொழிக்கேற்ப துயரால் வருந்திய தலைவிக்கு அமிர்தம் போல இனிமையான சூழலை ஏற்படுத்தும் என்ற நோக்கில், நம்பிக்கையில் முதுபெண்டிரின் மனப்பாங்கு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நன்மையின்பால் உள்ள ஆர்வமும், தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகட்கு "அடிப்படை" எனலாம்.

**"நெல்நீர் எறிந்து விருச்சியோருக்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"[4]**

என்ற அடிகளால் முதுபெண்டிரின் சொல் கேட்டு நிற்கும்போது சில நேரங்களில் சொல் தடுமாறினால் கெட்டது எற்படும் என்ற நம்பிக்கை முல்லைநிலப் பெண்கள் கொண்டிருந்தனர். இதனால் தான் நினைக்கும் காரியம் நடைபெறுமா என்ற அச்சமும் கொண்டிருந்தனர் என்பதை உணரமுடிகிறது.

## ஆயர் மகளிர் மனநிலை

முல்லை நிலத்தில் உள்ள மாடுகள் பகல் முழுவதும் இரைதேடச் செல்லும். பிறகு அந்திப் பொழுதில் வீடு சேர நினைக்கும். அந்நிலையில் புதுவதாகப் பிறந்த கன்றானது பசித்துயரால் வருத்தமடையும். அப்பொழுது ஆயர் மகள் கன்றை நோக்கி,

**"இன்னே வருகுவார் தாய ரென்போள்"[5]**

எனக் கூறினாள். கயிற்றினைக் கையோடுக் கட்டியிருந்தவளாய் குளிரால் நடுங்கும். கன்றைப் பார்த்து, உன் தாய் நிறைய புல் மேய்ந்துவிட்டு இப்போதே வந்துவிடுவார். வருத்தம் வேண்டாம் என்ற கூற்று முல்லை நிலத்தில் அஃறிணை உயிர்கள் மீது

அளவற்றப் பாசம் கொண்ட ஆயர்மகளின் மனநிலை இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**"தன்னைப்போல் பிற உயிர்களையும் நேசி"**

என்ற உயர்ந்த மனம் முல்லைநில மக்களின் வாழ்வியலோடு பிணைந்து இருந்தது என்பதை ஆயர்மகளின் சிந்தனையால் முல்லைப்பாட்டியல் புலப்படுகிறது.

இவர்கள் இரக்கக் குணமுடையவர்களாய் இருப்பது மட்டுமன்றி வீரம் செறிந்த பெண்களாயும் விளங்கினர். திணை அடிப்படையிலான வாழ்க்கை முறையினைக் கொண்டவர்கள். தங்களின் துணையைத் தேர்வு செய்யும் அப்பொழுது. முல்லை நிலத்தைக் காக்கும் பொருட்டு வீரம் மிக்க துணையை நாடினார்கள். முல்லை நிலம் என்பது காடு சேர்ந்த பகுதியாகும். நாட்டின் புறப்பகுதி "காடு" எனக் கொள்ளப்படுகிறது. காட்டில் வாழும் புலி, சிங்கம் முதலிய விலங்குகளினால் தங்களுடைய ஆடு, மாடு ஆகியவற்றிற்குத் தீங்கு நேராவண்ணம் அவற்றைக் காக்கும் பொருட்டும் துணிச்சலான ஆண்மகனையே அப்பெண்கள் துணையாக நாடினார்கள்.

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே ஆயமகள்"[6]**

என்ற கலித்தொகைப் பாடலில் ஆயர் மகளிர் சொல்லுகின்ற ஆற்றலுடைய ஏற்றினைத் தழுவுவதற்கு அஞ்சுபவனை இப்பிறவியில் மட்டுமல்ல மறுபிறவியிலும் தழுவமாட்டாள் என்ற அடிகளினால் வீரம் நிறைந்த மனநிலை உடையவர்களாகவும் இருப்பாள் என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

**தலைவியின் மனநிலை**

போரின் பொருட்டு தலைவியைத் தலைவன் பிரிந்துள்ளான். தன்னைப் பிரிந்த தலைவன் தன்னிடம் வரும் வரையில் ஆற்றியிருக்கும் தலைவியின் ஒழுக்கத்தை "முல்லை" என்று அகப்பொருள் இலக்கணம் கூறுகிறது. இந்நிலத்தில் வாழ்ந்த ஆய்ச்சியரும் முல்லை மலர்களை மிக விரும்பிச் சூடிக்கொண்டனர். ஆதலின் இந்நிலம் "முல்லை" எனப் பெயர் பெற்றது. தலைவியின் வருகை காலம் தாழ்த்திய ஒவ்வொரு நாளும் தலைவி தன் ஒழுக்கத்தை மீறாமல் கற்போடு இல்லறம் நடத்தி வந்தாள். இதனையே,

**"முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"[7]**

என்ற தொடர் முல்லை நில பெண்களின் கற்புக்கு அரணாக உள்ளது. முல்லை நில மக்கள் கற்போடு கூடிய ஒழுக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதற்கு மேலுள்ள சான்று பொருத்தமானதாக அமையும். தலைவியின் வருத்த மிகுதியைப் போக்க முதுபெண்கள் நற்சொல்லை விரும்பி இறைவனை வழிபட்டு நிற்பார்கள். முல்லை நிலத்தின் நிகழ்வுகள் தலைவியை ஆற்றுப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

அ) ஒன்று ஆயமகள் கன்றை நோக்கி இப்போதே வந்துவிடுவார் நும் தயார், என்ற கூற்றம்.

ஆ) தலைவன் போருக்குச் சென்ற காலத்தில் நற்குணம் உடையவர்கள் கேட்ட பறவையின் சகுனமும் நன்மையையே ஏற்படுத்தும் என்றாள். இங்குக் கூறப்படும் நல்ல நிமித்தங்கள் தலைவியின் மனநிலையை மாற்றும் என்பது முதுபெண்டிரின் நம்பிக்கை ஆகும்.தமிழனுடைய நம்பிக்கைகள் மரபு வழிப்பட்டது எனலாம் இருந்தாலும் இந்த ஆறுதல் மொழி கேட்ட தலைவி வருத்த மிகுதியால் கண்களிலிருந்து முத்துக்கள் போன்ற நீரை முல்லை நிலத் தலைவி சிந்திக் கொண்டே இருப்பாள்.

**"பூம்போலுண்கண் புலம்பு முத் துறைப்பக்"[8]**

என்ற முல்லைப்பாட்டினுடைய அடிகளில் தலைவினுடைய மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுவனவாகவும் உள்ளது. தான் வருவதாய் கூறிய காலத்து வராததால் தன் உடல் இழைத்து, கழன்று விழும் தன்னுடைய வளையல்களை இறுக்கிக் கொண்டும், தலைவனை எண்ணி மயங்கியும், பெருமூச்சுவிட்டும் ஏழு அடுக்குகள் நிரம்பிய செல்வமாளிகையில் தலைவனுக்காகக் காத்திருந்த மனநிலையை,

**"இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து"[9]**

என்ற பாடலடி விளங்குகிறது.

**கல்வி கற்பாத பரிபோல்காரரின் மனிநிலை**

முல்லை நிலத்தில் பகைவர்களின் அரண்கள் மற்றும் பசியத்தூறுகளை அழித்து கடல் போன்ற பெரியப் பரப்பினையுடைய பாசறைத் தலைவனுக்கு ஏற்படுத்தப்பட்டது. தெருக்களின் முற்றத்தில் யானைகள் அதிமதுரத் தழையினையும்,

கரும்பையும் உண்ணாது நெடுநேரம் நெற்றியைத் துடைத்துக் கொண்டே நின்று கொண்டிருந்தது. கல்வி கற்காத இளைஞர் பரிகோல்காரர் யானையை உண்ணும்படி பழக்குவதற்கு இரட்டையாகப் பிளந்த முள்ளிலான இரட்டையாகப் பிளந்த முள்ளிலான பரிகோல் கொண்டு குத்தி வற்புறுத்துவர். இதனையே திருவள்ளுவர்,

**"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையார் கல்லா தவர்"**[10]

என்ற திருக்குறள் அடிகளில் கல்லாதவருடைய விழிகளை உடம்பில் ஏற்பட்டப் புண்களாகக் கருதினர். இங்ஙனம் கல்விக்குத் திருவள்ளுவரின் கருத்து குறிப்பிடத்தக்கது.

**"கல்லாதவரே கண் இல்லாதவர்"**

என்ற பழமொழி கற்காத பரிகோல்காரரின் மனநிலைக்குப் பொருந்துகிறது. ஆனால் கன்றின் பசியறிந்த ஆயர்மகள் அதன் பசியை உணர்ந்து இன்னே வருகுவர் நின் தயார் என்ற அழகிய தமிழ்மொழியில் அக்கன்றினுக்கு ஆறுதல்மொழி கூறும் உயர்ந்த மனநிலையைப் பெற்றிருந்தனர் என்பதற்கு முல்லைப்பாட்டில் ஆயர்மகள் சிறந்த உதாரணமாகும். தமிழ் இலக்கியமான முல்லைப்பாட்டு இதற்குத் தகுந்த சான்றாக அமைந்துள்ளது.

இதனால் தான் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**[11] என"ற புறநானூற்று அடி யாவரும் என்பது ஐந்தறிவு படைத்த விலங்குகளையும் குறித்தது எனலாம்.

**பாசறையில் பெண்கள்**

முல்லை நிலத்தில் மன்னனுக்குப் பாசறை அமைப்பது இயல்பு. ஆனால் கோயில் அமைத்து வழிபடுவது அரிது. இங்கு அரிதான செயலை மக்கள், மன்னன் மீது கொண்ட பற்றினால் செய்ததே இதற்கு மூல காரணமாகும். சிறந்த அரசனின் இருப்பிடத்தைக் காக்கும் பொருட்டு இருளை நீக்கி ஒளிதரும் வகையில் தொடி அணிந்த முன்கையினையும், அழகினையும் இரவைப் பகலாக்கும் ஒளியுடைய ஆடையைப் பெண்கள் அணிந்திருந்தனர். அவர்களின் ஆடையும், மனமும் "அரசனைப் காப்பது" என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. சிறிது இருள் பேராபத்தை ஏற்படுத்தும் என நினைத்து ஐயம் கொண்டு பாவை விளக்கை எறியச் செய்தனர். இவ்வாறு பாசறையில் பாசத்தோடு பணி செய்து வந்தனர் என்பதற்கு,

**"கையமை விளக்க நந்து தொறுமிட்ட"**[12]



© 2024, IRJTSR 

என்று கூறுவது பெண்களின் மனநிலையைக் காட்டுகிறது. பெண்கள் பாசறைக்குச் செல்லும் பழக்கம் பண்டைய காலத்தில் இருந்தது. எதிந்து கொண்டிருந்த பாவை விளக்கு அணைந்த போதெல்லாம் அதனைக் கொழுத்தி ஒளிபெறச் செய்தனர்.

**"யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கையேத்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து**
**பரு உத்திரி கொல் இய குரூஉத் தலை**
**நிமிர் எரி"[13]**

என்ற அடிகளில் யவனர்களால் பாவை விளக்கு ஏற்படுத்தப்பட்டது. அதனை பணியாளர்கள் நிறைய எண்ணெய் ஊற்றி திரியிட்டு பாசறையில் மன்னனைக் காத்து வந்ததை நெடுநல்வாடையின் வழியாக அறிய முடிகிறது. இதனால் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் வீரத்துடன் விளங்கினார்கள் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**காவலர்களின் மனநிலை**

அரசனுக்கு அமைத்த கோவிலைச் சுற்றி தீவிர பக்தன் வலம் வருவதுபோல் காவலர்கள் காக்கும் தொழிலில் ஈடுபட்டனர். ஒழுக்கமுடைய மெய்காப்பாளரும். நாழிகைக் கணக்கரும் மன்னனைக் காக்கும் மனநிலையில் பிறழாது செய்ல்பட்டு வந்தனர். முல்லை சான்ற ஒழுக்கம் பெண்களுக்கு மட்டுமல்ல காவலர்களுக்கு உரியதாகும்.

**"பொழுதறியும் பொய்யா மாக்கள்**
**தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி?"[14]**

கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் பகையை வெல்வதற்குப் படையை நடத்தி செல்கின்றவளே! உன்னுடைய நாழிகை வட்டிலில் கடந்துள்ள காலம் இவ்வளவு காண்பாயாக என்று கூறியிருப்பார்கள். அரசனின் செயல்பாடுகளில் தொய்வு ஏற்படக்கூடாது என்பதற்கு நாழிகையை அறிவுறுத்தும் மனநிலையில் இருப்பான் என்பதை அறிய முடிகிறது.

அச்சம் தரும் தோற்றத்தினையும் வலிமையான உடலையும், மன உறுதியினையும் உடைய யவனர்கள் அரசனின் இரண்டாகப் பகுக்கப்பட்ட பள்ளியறையில் விளக்கினை எறியச் செய்து ஊமை மிலேச்சர்கள் காத்து நின்றனர்.

**"உடம்பினுரைக்கு முரையா நாவின்**

**படம்புரு மிலேச்சர் உழையராக”[15]**

அரசனுக்கு பிற நாட்டை சேர்ந்தவர்களுக்கும், தமிழ்மொழியை அறியாதவர்களுமான மிலேச்சரைக் காவலுக்கு வைத்திருந்தனர். இவர்கள் ஊமையாக இருந்தால் தான் உள்நாட்டு இரகசியங்கள் காக்கப்படும் என்று எண்ணினர். அதனாலேயே வெற்றி பற்றிய சிந்தனையிலேயும், போரைப் பற்றியுமே காவலர்கள் எண்ணியிருந்தார்கள்.

**மன்னனின் மனநிலை**

பாசறையில் மாந்தர்களனைவரும் அரசனைக் காக்கும் மனநிலையில் இருந்தனர். ஆனால் அரசனோ போர் விருப்பத்தினால் உறக்கமில்லாமல் பகைவர்களால் பாதிக்கப்பட்ட யானைகளையும், குதிரைகளையும் இறந்த வீரர்களையும் நினைத்துக்கொண்டு இருந்தான் தன் நாட்டு உயிர்கள் மேல் அரசன் கொண்ட பற்று இப்பாட்டில் புலப்படுகிறது.

**“முல்லைதானே வஞ்சியது புறனே”[16]**

என்ற புறத்திணைக்கேற்ப மறுநாள் போரில் பகைவர்களை வென்று வஞ்சி மாலைக்கு வெற்றியை நிலை பெறச் செய்தான்.

**“ஒருகை பள்ளி யொற்றி யொருகை**
**முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிது நினைந்து”[17]**

எனத் தலைவன் போரையும், போரில் மாய்ந்தவர்களையும் எண்ணி கொண்டிருக்க, தலைவியோ தலைவனைக் காணவேண்டும் என்ற ஆவலோடு காத்திருந்தாள். போர் முடிந்த மறுகணமே தன் குதிரையைத் தேரில் பூட்டி தலைவியைக் காண விரைந்து சென்றான்.

துணையாக இருந்து வெற்றிப்பெறச் செய்வது அவர்களுடைய மனம் மட்டுமே என்பதற்கு நப்பூதனாரின் முல்லைப்பாட்டு சான்றாக அமைகிறது. இதனையே தொல்காப்பிய பொருளியல் நூற்பா விளக்கமாகவும், நுணுக்காகமாகவும் கூறுகிறது.

**”இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை**
**உள்ளம் போல உற்றுழி உதவும்**
**புள் இயல் கலிமா உடைமையான”[18]**

என்ற நூற்பாவில் பறவைப்போல் விரைந்து செல்லும் குதிரையை உடைய தலைவன் வினை முடித்து மீளுகையில் இடைச்சுரத்தில் தங்குவதில்லை. அவன் உள்ளமும் பறவைப்போல் விரைந்து தலைவியைக் காண விழையும் என்று எடுத்தியம்புகிறது.

**”பறவையானாலும் பறவையனைய**
**புரவியானாலும் பறந்து அல்லது**
**பாய்ந்தோடி ஊர்ப்போய்ச் சேரக்குறைந்தது**
**பத்து நாழிகையாகிலும்**
**தேவைப்படும். ஆனால் அவள்மீது காதல்**
**கொண்ட மனமோ**
**நினைத்தவுடன் போய்ச்சேரும்”**[19]

என்று தொல்காப்பியப் பூங்காவில் மு.கருணாநிதி குறிப்பிடுகிறார்.

முல்லை நிலத்தில் தன் வினைமுடித்து மீண்ட தலைவன் வரும் வழியில் உள்ள வண்டுகள் தேரின் ஒலியைக் கேட்டுத் துன்புறாதவாறு அறுத்துக் கட்டினான். ஒரு சிறிய வண்டினத்திற்கே துன்பம் செய்யாத தலைவன் தலைவியை மட்டும் துன்புறுத்தவாப் போகிறான். வினை முடித்த மறுகணமே தலைவியினுடைய எண்ணத்தைக் கொண்டிருந்தான். இதனையே, அகநானூற்று பாடலில்,

**“பூத்த பொங்கர் துணையோடு வதிந்த**
**தாது உண் பறவை பேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்”**[20]

என்ற முல்லை நிலத் தேரோட்டியாகத் தலைவனின் இனிய மனம் தெளிவாகப் புலப்படுகிறது.

## முடிவுரை

இக்கட்டுரையில் முல்லைப்பாட்டின்வழி மாந்தர்களின் வேறுபட்ட மனங்களையும், காவலர்களின் கலங்கமில்லா மனங்களையும் அறியஇயலுகிறது. மனமானது அது சிந்திக்கும் அளவிற்கேற்ப விரைந்து செல்லும் தன்மையுடையது. தலைவனுடைய இலட்சியத்திற்கம் தலைவியினடைய ஒழுங்கிற்கும் துணையாக இருந்து வெற்றி பெறச்செய்வது அவர்களுடைய மனம் மட்டுமே என்பதற்கு நப்பூதனாரின் முல்லைப்பாட்டு சான்றாக அமைகிறது.

## தொகுப்புரை

- பத்துப்பாட்டினுள் அகத்தைப் பற்றிப் பேசும் நூல்களுள் நப்பூதனாரின் முல்லைப்பாட்டும் ஒன்றாகும்.
- 102 அடிகளில் 47 அடிகள் அகம் சார்ந்த செய்திகள் இடம்பெறுகின்றன. மீதமுள்ள 56 அடிகள் புறம் பற்றி அமைந்துள்ளது.
- அக இலக்கிய நூல்கள் இரு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. களவு சார்ந்த அகப்பாடல்
2. கற்பு சார்ந்த அகப்பாடல்

இவ்வாறு அமைந்த முல்லைப்பாட்டிற்கு துறையும் கூற்றும் கிடையாது. இது முல்லைப்பாட்டின் குறைபாடு அன்று. சிறப்பு பண்பு என்று கருத இயலும்.

- பெருமுதுப் பெண்டிர் எனப்படும் நற்றாய் தலைவியினுடைய வருத்தம் நீக்க நெல்லையும் மலரையும் தூவி நற்சொல் கேட்டு நின்றனர்.
- ஆயர் குலப்பெண்ணின் கூற்று தலைவியைத் தேற்றும் விதமாகவும் அமைந்துள்ளது. இன்றைக்கு இதுப்போன்ற பெண்கள் இல்லாததாலே விவாகரத்தும் பெருகியுள்ளது.
- கல்லா இளைஞராகிய பரிகோல்காரரின் யானையைத் துன்புறுத்தும் செயல் அவரின் கல்வி கற்காத நிலையைக் காட்டுகிறது. இருப்பினும் வடமொழிப் பயிற்றுநராகவும் விளங்கியிருத்தல் சிறப்பாகும்.
- பாசறையில் பெண்கள் அரசனைக் காக்கும் பொருட்டும் எந்தவித தீமையும் ஏற்படா வண்ணம் விளக்கேற்றி நின்றனர். இதனால் பாசறையில் ஆண்களுக்கு நிகரான தைரியமும், மனவலிமையும் பெண்கள் பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.
- காவலர்களாக ஊமை மிலேச்சர்களும், மெய்க்காப்பாளர்களும், நாழிகைக் கணக்கிட்டு தலைவனுக்கு அறிவுறுத்துபவர்களும் அரசனின் பாசறைக்கும், போர்த்தொழிலுக்கும் வெற்றி ஏற்படுத்தும் மனநிலையில் மட்டுமே இருந்ததாக முல்லைப்பாட்டு எடுத்துரைக்கிறது.
- அரசன் தனக்கான பாசறையில் வெட்டுண்டு விழுப்புண்பட்ட வீரர்களையே எண்ணியிருந்தான். இவ்வாறு காவலர்கள் அரசனுக்காகவும, அரசன் காவலர்களுக்காகவும் பணியாற்றித் தம் கடமையைச் செய்ததை அறிந்துகொள்ளமுடிகிறது.

- அரசன் பாசறையில் தலைவியைப் பற்றிய எண்ணமில்லாமல் தன் போர்த் தொழிலைச் செய்தான். தலைவி முல்லை சான்ற கற்பையே தன்னுடைய மேம்பட்ட ஒழுக்கமாகக் கொண்டு ஒழுகினாள் என்பதை முல்லைப்பாட்டின்வழி நுட்பமாக உணர்ந்துகொள்ள முடிகிறது. முல்லைப்பாட்டில் தலைவியின் மனமும் தலைவனின் மனமும் களங்கமில்லாமல் படைத்திருப்பது ஆசிரியரின் பெருமையாகும்

## அடிக்குறிப்புகள்

[1] கௌமாரிஸ்வரி, திருக்குறள் தெளிவுரை, குறள்.595, இராமையா பதிப்பகம், முதற்பதிப்பு ஏப்ரல்-2008, சென்னை - 600014.

[2] சுபாஷ் சந்திரபோஸ் (உரை), தொல்.பொருள் நூ.6, தமிழ்க்களஞ்சியம் - 3, தஞ்சாவூர் - 613001.

[3] முருகேசன் க.ப. (உரை),பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப.134, அ.11, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு - 2009, சென்னை - 14.

[4] தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.249, யாழ் வெளியீடு, சென்னை - 05.

[5] முருகேசன் க.ப. (உரை), பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப. 135, அ.16, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு - 2009, சென்னை - 14.

[6] தமிழமுதன் (உரை), கலித்தொகை மூலமும் உரையும், ப.260, சாரதா பதிப்பகம், சென்னை- 14.

[7] முருகேசன் க.ப. (உரை), பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப. 30, அ.16, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு - 2009, சென்னை - 14.

[8] மேலது நூல், ப. 135, அ.23.

[9] மேலது நூல், அ.23.

[10] கௌமாரிஸ்வரி, திருக்குறள் தெளிவுரை, குறள்.393, இராமையா பதிப்பகம், முதற்பதிப்பு ஏப்ரல் - 2008, சென்னை - 600014.

[11] பாலையன் அ.ப. (உரை), பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.137, அ.49)

[12] முருகேசன் க.ப. (உரை), பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப. 49, அ.16, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு - 2009, சென்னை - 14.

[13] மேலது நூல், ப.224, அ. 101-103

[14] மேலது நூல், ப.138, அ 55-56

[15] மேலது நூல், ப. 138, அ.65-66

[16] சுபாஷ் சந்திரபோஸ் (உரை), தொல்.பொருள் நூ.64, தமிழ்க்களஞ்சியம்-3, தஞ்சாவூர் - 613001.

[17] முருகேசன் க.ப. (உரை), பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப. 139, அ.16, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு - 2009, சென்னை - 14.

[18] சுபாஷ் சந்திரபோஷ் (உரை), தொல்.பொருள் நூ.192, தமிழ்க்களஞ்சியம்-3, தஞ்சாவூர் - 613001.

[19] சற்குணம்.மா (தொ.ஆ), பத்துப்பாட்டு ஆய்வுத்துணர், ப.73, சங்க இலக்கியப் பொதும்பர், விழுப்புரம்

[20] கிருட்டிணன்.அ, தமிழர் பண்பாட்டியல் (தொகுதி - 1), ப. 237, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 01.